செ.வெ.எண்:19 நாள்:13.04.2019

# அரியலூர் மாவட்டத்தில் தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்ட நுண் பார்வையாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தேர்தல் பணிக்காக 42 நுண் பார்வையாளர்களுக்கு தேர்தல் பணி தொடர்பான பயிற்சி வகுப்பு 27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தல் பொது பார்வையாளர் **முனைவர்.கே.ஹெச்.குல்கர்னி, இஆப.,** அவர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் அரியலூர் மாவட்டத்தில் 149.அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி ஆகிய இரு தொகுதிகளுக்கு 587 வாக்குச்சாவடிகளில் 87 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாகவும், 03 வாக்குச்சாவடிகள் நெருக்கடியாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வாக்குச்சாவடிகளுக்கு 42 நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, 35 வாக்குச்சாவடி அமைவிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர். மேலும், அவர்களுக்கு பயிற்சி இன்று (13.04.2019) வழங்கப்பட்டது. வாக்குச்சாவடிகளில் பணியாற்ற உள்ள நுண் பார்வையாளர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடத்த வேண்டும். நுண் பார்வையாளர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு வரவேண்டும். மாதிரி வாக்குச்சாவடி நடத்தப்பட்டவுடன், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எந்த பிரச்சனைகளும் இல்லை என்பதை உறுதி செய்த பின் தேர்தல் பொது பார்வையாளருக்கு குறுந்தகவல் அனுப்ப வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான மாதிரி வாக்குகளை அழித்துவிட்டு, வாக்குப்பதிவுக்கு தயார் நிலையில் வைக்க வேண்டும்.

மேலும், வேட்பாளர்களின் முகவர்கள் வந்துவிட்டார்களா என உறுதி செய்ய வேண்டும். அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டையை வாக்காளர்கள் எடுத்து வருகிறார்களா என்பதை வாக்குச்சாவடி அலுவலர்கள் முறையாக கண்காணிப்பதை நுண் பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு நாளில் நுண் பார்வையாளர்கள் எந்தந்த நடைமுறையை கண்காணிக்க வேண்டும் என்பது குறித்த கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாக அறிந்துகொண்டு, சிறப்புடன் பணியாற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கோட்டாட்சியர் சத்தியநாரயணன், வட்டாட்சியர் கதிரவன், மண்டல அலுவலர்கள், வாக்குப்பதிவு மைய அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**